Ti Ta
Nb Zr Ss
Ni Pt

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2015 Company

Tiaano® Innovation In Inert Metals since '92

#48, Noothanchary, Madambakkam, Chennai - 126. Ph.: +91 44 2278 1148, +91 94445 69900 Fax: 2278 1362 Email: marketing@tiaano.com Web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

### GOAL 2016-2017

- **Endeavour** : QUALITY
- **Turnover Target** : 120% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

### TESTIMONIALS

- **Customers...**
  - Up to Jan. 17 : 1005 Nos.
  - Up to Dec. 16 : 999 Nos.
- **Performance Jan. 17 ...**
  - Turnover growth : 3.90%
  - Employment growth : 0.53%
  - 100% Attendance : 6.32%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

### OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Treatment Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Equipments.
- Hydro Gen Go Green – HHO Generators
- Titanictrade – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Curriculum)

### ACHIEVEMENT CHART




## ஆசை

ஓர் ஊரில் பணக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மிகவும் பேராசை பிடித்தவன். மற்றவர்களிடம் இருப்பதை அபகரித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைபவன்.

அடுத்த ஊரில் ஏழை இளைஞன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் நல்ல புத்திசாலி, சுறுசுறுப்பானவன். அந்தப் பணக்காரனைப் பற்றிக் கேள்விப்பட்ட இளைஞன், அவனுக்கு நல்ல புத்தி கற்பிக்க வேண்டும் என்று நினைத்தான்.

ஒருநாள், ஊரின் ஒதுக்குப்புறத்தில் அந்த இளைஞன் வந்து நின்றான். அப்போது நல்ல பனி வெடவெட வென்று நடுங்க வைக்கும் குளிர். இளைஞன் நின்று கொண்டிருந்த வழியாக அந்தப் பணக்காரன் வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்டதும், இளைஞன் தனது கையிலிருந்த வாத்தியக் கருவியை மீட்டத் தொடங்கினான். நிறைய கிழிசல்கள் கொண்ட சட்டையை அவன் அணிந்திருந்தான்.

ஆனந்தமாகப் பாடிக் கொண்டிருந்த இளைஞனுக்கு அருகே வந்தான், பணக்காரன். வெடவெடக்கும் குளிரில் தன்னை மறந்து இசை மீட்டிக்கொண்டிருக்கும் அவனைப் பார்க்க, பணக்காரனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்த கடுங்குளிரில் உன்னால் எப்படி இவ்வளவு ஆனந்தமாக இருக்க முடிகிறது? என்று கேட்டான் பணக்காரன். அதுவா? என்று அலட்சியமாகச் சிரித்தவன், நான் அணிந்திருக்கிற இந்த பொத்தல்கள் நிறைந்த சட்டை தான் காரணம்! இதன் ஒரு துவாரத்தில் உள்ளே நுழைகின்ற பனிக்காற்று மறுவினாடியே அடுத்த துவாரத்தின் வழியே வெளியேறி விடுகிறது.

அத்துடன் இந்த சட்டை எனக்கு உற்சாகத்தையும் புதுத் தெம்பையும் தருகிறது! என்றான். பணக்காரனுக்கு அந்தச் சட்டையை எப்படியும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறந்தது. இந்த சட்டையை எனக்குத் தந்துவிடு, நான் உனக்கு நிறையப் பணம் தருகிறேன் என்றான். இளைஞன் தனது தந்திரம் பலித்ததை எண்ணி மகிழ்ந்தான். "அதெல்லாம் முடியாது!" என்றான்.

"எனது குதிரையையும் தருகிறேன்" என்றான் பணக்காரன், ஒருவாறு இளைஞன் சம்மதித்தான். பணக்காரன் தன் கையிலிருந்த பணம் முழுவதையும் கொடுத்ததுடன், குதிரையையும் கொடுத்தான். பழைய கந்தல் சட்டையை இளைஞனிடமிருந்து வாங்கிக் கொண்டான். ஏழை இளைஞன் அங்கிருந்து புறப்பட்டுப் போனான். தான் ஏமாந்து போனதைப் பணக்காரன் நீண்ட நேரத்திற்குப் பிறகே உணர்ந்துக்கொண்டான்.

நண்பரகளே! ஆசைதான் எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. ஆகவே நம்முடைய வாழ்க்கையில் ஏழைகளை கொள்ளையிடாதபடிக்கு, வாழ்வின் ஒவ்வொரு படியிலும் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

*Compiled By : Ms. P. E. Nancy*
Director - Admin

## FUNCTIONAL WISHES




Happy Ugadi
28th March

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank

Auditing : M/s. Nisar & Kumar

AQ Auditing : M/s. Juran Quality

Legal Advisers : Lr. M.K. Govindan

: Lr. V. Benedict Vincent

Tech. Consultant: Dr.G.S. Viswanath

Central Excise : Mr. R. Raghavan

Health Care : M/s. Bethesda Hospital

Tel: 22294565

ESI Corporation : Tambaram Dispensary

Tel: 044 2226 0194

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mr. E. Sekar** **03rd Mar.**
Production

**Mr. N. Dhasarathan** **03rd Mar.**
Administration

**Mr. K. Ramesh** **15th Mar.**
Coating

**Ms. M. Bhavani** **17th Mar.**
Administration

**Mr. C. Vijayakumar** **18th Mar.**
Fib Tec

**Ms. E. Kala** **22nd Mar.**
Administration

**Mr. G. Sampath Kumar** **22nd Mar.**
Production

**Mr. A. Sabapathy** **24th Mar.**
Fib Tec

**Mr. S. Arokya Raj** **27th Mar.**
Production

**Mr. S. Santha Kumar** **30th Mar.**
Production

**Best Wishes from Tiaano Employees**

## கான்:.பிடன்ஸ் கார்னர்

ஓர் அரசனின் விருந்தில் கலந்துகொள்ள விரும்பிய பிச்சைக்காரன் முன் ஒரு தேவதை தோன்றி அழகான ஆடை ஒன்றைப் பரிசளித்ததுடன், இந்த ஆடை எப்போதும் அழியாது என்ற வரமும் கொடுத்தது. ஆனாலும் பிச்சைக்காரனுக்கு, தன்னுடைய ஒரே கந்தல் ஆடையை இழக்க மனமில்லை. அதையும் மூட்டையாகக் கட்டிக் கொண்டு அரச விருந்துக்குப் போனான்.

அணிந்திருந்த ஆடை கண்டு அனைவரும் வரவேற்றனர். அந்த ஆடை தினமும் புதிதாய்த் தோன்றியது. சந்தேகத்தால் கந்தை மூட்டையை பிச்சைக்காரன் விடவில்லை. ராஜ உடையுடன் உலவினாலும் அவன் ஏந்திய கந்தல் மூட்டையே அவன் அடையாளம் ஆனது.

நம் பலவீனங்களை நாம் விடாதவரை எந்த வளர்ச்சியும் பயன்தராது.

— கான்:.பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## வெற்றியை விட தியாகமே சிறந்தது

சியாட்டில் நடந்த சிறப்பு ஒலிம்பிக்கில் உடல் ஊனமுற்ற சிறுவர் சிறுமியருக்கான ஓட்டப்பந்தயத்தில் 9 பேர் கலந்து கொண்டனர்.

வேட்டுச்சத்தம் கேட்டவுடன் 9 பேரும் ஓடத் தொடங்கினர். அப்போது தொடங்கிய இடத்திலேயே மணலில் கால் தடுக்கி ஒரு சிறுவன் உருண்டு விழுந்து “ஐயோ” என்று அலறினான்.

சிறிது தூரம் ஓடிய மற்ற 8 பேரும் வேகத்தை குறைத்துத் திரும்பிப் பார்த்தனர். கீழே விழுந்தவன் அழுவதைக் கண்டு அனைவரும் ஓடி வந்த வழியிலேயே திரும்பி வரத் தொடங்கினர்.

தொடக்கத்திலேயே விழுந்து விட்ட அவனருகில் வந்த ஒரு சிறுமி குனிந்து அவன் கன்னத்தில் முத்தமிட்டு எழுப்பினாள். “இப்போது எல்லோரும் ஓடலாம். நீயும் தயாரா?” என்று கேட்டாள்.

உடனே அந்த 9 பேரும் கைகோர்த்துக் கொண்டு, ஓடு களத்தில் ஒன்றாகச் சேர்ந்தே மெதுவாக நடக்கத் தொடங்கினர். அனைவரும் ஒன்றாகவே பந்தயத்தில் பங்கேற்று ஒன்று சேர்ந்து நடந்து எல்லைக் கோட்டை நோக்கி முன்னேறியதைக் கண்ட பல்லாயிரக் கணக்கான பார்வையாளர்களின் மகிழ்ச்சி ஆரவாரம் அவர்கள் எல்லைக் கோட்டை தொட்ட பிறகும் தொடர்ந்தது.

## Teaching The Right Value

Many Times, inadvertently and innocently, we end up teaching wrong values within our Families.

For example, We tell our children to lie for us. Tell them I am not here. We all look to our parents and teachers to teach us integrity and many times we are disappointed.

Practising these petty lies turns a person into a professional liar. When we ask others to lie for us. A day will come when they will lie to us too.

**Don't Tell A Lie**

— திருச்சிராப்பள்ளி ஸ்ரீஜயப்ப சங்கம் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## February Celebrations



11th Feb – KG Graduation Day

## January Celebrations

### Pongal Celebration

**Pongal** was celebrated with great pomp and show on **13th January 2017**. Sweet pongal was prepared in the morning followed by cultural programme by students. The bullock cart ride was greatly enjoyed by students.

### Spell Bee Prize Distribution

The **spell bee organization** conducted a competitive test on **8th November 2017**. 83 children took part in the first level competition 6 students won the **School Topper Medals** and the remaining students were awarded with certificates.

### Sports Day Celebration

The **5th Annual Sports Day** was held on **26th January 2017**. The chief guest of the day was **Mr. V.V.Krishna Moorthy, Retd**. Indian Boxing Coach.

The programme started with the Lighting of the Olympic Torch followed by mass drill, aerobics etc Special games were organized for parents.

# Tiaano Vidyashrm

## January Celebrations Photo Gallery






















## கவிதைகள்

### நம்பிக்கை

உரைப்பதெல்லாம்
உளறல்கள் ஆகலாம்
ஒருநாள் உன் உளறல்கள் கூட
தலைப்பு செய்தியாகலாம்.

### சாதித்து விடலாம்

அடுத்த நொடி
துணிச்சல் இருந்தால்
வென்று விடலாம்...!!!

எடுத்த.......
ஒவ்வொரு நொடியும்
துணிச்சல் இருந்தால்
சாதித்து விடலாம்...!!!

### முயற்சி திருவினையாக்கும்

துவண்டுவிடாதே
தோல்விகள் இழப்பல்ல
நீ கொண்டாடப் போகும்
வெற்றிக்கான சாத்தியக் கூறுகளே,
என்றும் வீணாவதில்லை
வினை விதைத்துக் கொண்டேயிரு.

முளைத்தால் மரம்
இல்லையேல் உரம்!!!

Compiled By: Mrs. M. Sudha
Marketing

## ஹைக்கூ

அவசரமாகத் தவறு செய்வதை விட –
தாமதமாகச் சரிவர செய்வது மேல்...!

## சிந்தனைக்கு

### சிந்தனை செய்

பந்தயத்தில் ஆயிரம் பேர் முன்னே ஓடுகையில், நீ மட்டும் பின்னே ஓடிப்பார்...
உலகமே உன்னை பார்க்கும்...

செய்வது தவறே ஆயினும் அதை தனித்துவத்துடன் செய்...

இன்று அவமானப்பட்டால்தான் நாளை அரசாள முடியும்...

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.**
**– Editor**

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி LXII)

### அழுக்கு எது? சுத்தம் எது?

இதற்கும் ஒரு காரணம் உண்டு. இதுபோன்ற அடர் நிறங்கள் அழுக்கை மறைத்துவிடும். பார்க்கிறவர்களால் அழுக்கு படர்ந்திருப்பதைச் சட்டென்று கவனிக்கமுடியாது. இதனால்தான் நம் வீடுகளில்கூட, ஓடி விளையாடுகிற பையன்களுக்கு ஆடைகளைத் தேர்ந்தெடுக்கும்போது, 'அழுக்கு தெரியாத' நிறங்களையே பார்த்து பார்த்து எடுக்கிறோம்.

இப்படி அழுக்கை மறைக்க விரும்புகிற மனோபாவம் மிகவும் தவறானது. அது மற்றவர்களை ஏமாற்றுகிற தந்திரம் என்று நினைத்து, நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். ஏனெனில், இப்படி அழுக்கை மறைக்கிறவர்கள் யாரும் அதை நிரந்திரமாக நீக்குவதற்குச் சரியான ஏற்பாடுகளை எடுப்பதே இல்லை.

அப்படியானால், நாம் செய்யவேண்டியது என்ன?

அடர்த்தியான வண்ணங்களைத் தூக்கி எறியவேண்டும். வெள்ளை அல்லது அதேபோன்ற லேசான, அழுக்கைப் பளிச்சென்று காட்டக்கூடிய நிறங்களைத் தேர்ந்தெடுத்துப் பூசவேண்டும்.

இப்படிச் செய்வதால் சிறிய அழுக்கும்கூட, சட்டென்று உடனே கண்ணுக்குத் தெரியும். பார்க்கிறவர்களை உறுத்த ஆரம்பிக்கும். அந்த இடங்களில் பணிபுரிகிறவர்களை, 'அழுக்கு விரோதி'களாக மாற்றுவதற்கு இதுதான் முதல் படி!

அதாவது, அழுக்கு கண்ணில் படாதவரை அதைப்பற்றிக் கண்டு கொள்ளாமல் இருக்கிறவர்கள் அல்லது ஒருமாதிரியாகச் சகித்துக் கொண்டு தொடர்கிறவர்களெல்லாம், இப்போது அசுத்தம் வெளிப்படையாகத் தெரிவதால், அதற்கு ஏதேனும் ஒரு மாற்று நடவடிக்கை எடுக்கவேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறார்கள்.

இவர்களெல்லாம் ஒரே ராத்திரியில் சுத்தப் பிரியர்களாகிவிடுவார்கள் என்று சொல்லமுடியாது. ஆனால், தங்கள் அழுக்குக்கு மத்தியில் நின்று கொண்டிருக்கிறோம் என்று அவர்களுக்குள் மனநீதியிலான அழுத்தமும், லேசான குற்றவுணர்ச்சியும் உண்டாகும் அல்லவா? அதுதான் முக்கியம்.

தொடரும்...

### HEAT EXCHANGER

